# 2015

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

## வருடாந்த செயற்பாட்டு அறிக்கை

## Annual Performance Report

මහානගර හා බස්නාහිර සංවර්ධන අමාත්‍යාංශය

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

Ministry of Megapolis and Western Development

**மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு**

# *வருடாந்த செயற்திறன் அறிக்கை - 2015*

17 வது மாடி, சுகுறுபாய, பத்தரமுல்ல.

**தொலைபேசி : 0112 864 770 /0112 866 447**
**பெக்ஸ் : 0112 887 909**
**தொலைமடல் : info@megapolismin.gov.lk**
**இணையத்தளம் : www.megapolismin.gov.lk**

# மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

## கௌரவ பாட்டாலி சம்பிக்க ரணவக்க (பா.உ.)

**அமைச்சர், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்ச**

## கௌரவ லசந்த அலகியவண்ண (பா.உ.)

**பிரதி அமைச்சர், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்ச**

**அமைச்சின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள்.**

**திரு. நிகால் ரூபசிங்க**
*செயலாளர், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு*

**திருமதி.கே. டபிள்யு.ரீ.என். அமரதுங்க**

*மேலதிக செயலாளர் (நிர்வாகம்)*

**திரு. பி. சுரேஸ்**

*மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி)*

**திரு. மாதவ வைத்யரத்ன,**

*மேலதிக செயலாளர் (மாநகரம்)*

# உள்ளடக்கம்


1. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ………………….......................…… 1-2

2. அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு ……………………………..........................……….. 3

3. துறைசார் முன்னேற்றம்

3.1 நிர்வாகப் பிரிவு .......................................................................................................... 4-5

3.2 கணக்குகள் பிரிவு .......................................................................................................... 5-7

4. அமைச்சின் கீழுள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ............................ 8-9

5. அமைச்சின் கீழ் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

5.1 வெளிநாட்டு நிதியத்தின் கீழ் அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள் .................................... 9-10

5.2 உள்நாட்டு நிதியத்தின் கீழ் அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள் ...................................... 10-12

# 1. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

1933/13 என்ற இலக்க மற்றும் 2015.09.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக இவ் அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

## தொலைநோக்கு

மக்களின் பொருளாதார மற்றும் ஆன்மீக நல்வாழ்வு அதே போல இயற்கையுடன் ஐக்கியமான செழிப்பான வாழ்க்கையொன்றினை உறுதிப்படுத்தும் நிலைபேறான நகர வாழ்க்கையொன்று.

## பணிக்கூற்று

சிறந்த நகர்ப்புற திட்டமிடல், பொறியியல் திறமைகள், அதி உன்னத நவீன தொழில்நுட்பம் மற்றும் உலகின் உன்னதமான நடைமுறைகளைப் பயன்படுத்தி, நாட்டின் மூலோபாய ரீதியில் முக்கியமான இடங்களில் நன்கு திட்டமிடப்பட்ட பசுமையான, சுத்தமான மற்றும் அழகான நகர்ப்புற குடியிருப்புக்களை உருவாக்குவதனூடாக தேசத்தின் பொருளாதாரச் செழிப்பினை அடைதல் மற்றும் இலங்கைவாழ் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

## நோக்கங்கள்

அமைச்சின் அடிப்படை நோக்கமாவது, மக்களின் வாழ்க்கையின் தரத்தினை உயர் மட்டத்தில் முன்னெடுப்பதுடன், நகர்ப்புற பிரதேசங்களில் வாழும் மக்களை நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் பங்குதாரர்களாகக் கொண்டு உறுதிப்படுத்தப்படும் முறைசார் மாற்றங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நகர்ப்புறச் சமுதாயத்திற்குக் கொண்டு செல்லுவதாகும். இதனூடாக இலங்கையினை, ஆசியாவின் வர்த்தகம், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கு இயலும்.

இவ் அமைச்சின் அடிப்படை பொறுப்புக்களுள், ஒட்டு மொத்த இலங்கைக்குமான தேசிய பௌதிக திட்டத்தினை திட்டமிடுதல், மூலோபாய, பொது நகரத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல் உள்ளடக்கப்படுகின்றது. அதே போல அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளினுள் ஒட்டுமொத்த மேல் மாகாணத்திலும் முழுமையான அபிவிருத்தியொன்றினை உருவாவாக்கும் நோக்கில், அதனை மாநகரமொன்றாக மாற்றுவதற்கு அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

மேல் மாகாண பிராந்திய மாநகர அபிவிருத்திச் செயற்பாட்டினை, இலங்கையில் நீண்டகாலம் சிறந்தவாறு முன்னெடுத்து, நிலைபேறான எதிர்காலத்தினை நகர்ப்புறச் செயற்பாட்டிற்கு வழிகாட்டும் அபிவிருத்திக்கு கேந்திரமாகக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. நாட்டின் மூலோபாய ரீதியில் முக்கியமான இடங்களில் வசதியான நகர்ப்புற குடியிருப்புக்களைத் திட்டமிடுவதற்கு மேலாக அதனூடாக நகரமயமாக்கலின் காரணமாக உருவாக்கப்பட்ட கழிவு, சேரிகள், ஆற்றல், போக்குவரத்து நெரிசல், சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்டு எழுந்துள்ள குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தேவையான தீர்வுகளை வழங்குவதற்கும் முயற்சிக்கப்படுகின்றது

## அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்

- மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்பிலான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்களினைத் தயாரித்தல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- கொட்டாவ, கடுவலை மற்றும் கடவத்தை நகர அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகள்.
- நகரப் பிரதேசங்களின் பொருளாதார, சமூக மற்றும் பௌதிக மேம்பாட்டினை ஒன்றிணைத்து முறைசார் வகையில் மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளினை வலுவூட்டுதல்.
- நகர திண்மக்கழிவு முகாமைத்துவம்
- தாழ் நிலங்களினை மீட்டல் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்பிலான செயற்பாடுகள்.
- நகரப் பிரதேசங்களில் காணப்படும் சேவைகள், வசதிகள், குறைவான பகுதிகள், சதுப்பு நிலங்களினை, பொதுத் திட்டத்திற்கமைய அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டலினை வழங்குதல்.
- தேசிய பௌதிகத் திட்டம் மற்றும் பிரதேச பௌதிகத் திட்டத்தினைத் தயாரித்தல்.
- ஒன்றிணைந்த நகர அபிவிருத்தியொன்றினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய பௌதிகத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு சகல நிர்மாணப் பணிகளினையும் செயற்படுத்தி ஒழுங்குபடுத்துதல்.
- அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுடன் தொடர்பிலான செயற்பாடுகள்.
- அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் வரும் நிறுவனங்களினைக் கண்காணித்தல்.

### அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள்

- தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம்
- நகர அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

### அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்படும் உள்ளூர் நிதியக் கருத்திட்டங்கள்.

- கொழும்பு நகரினை அண்டிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம்
- மேற்கு பிராந்திய மாநகரப் பிரதான திட்டமிடல் கருத்திட்டம்


## அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியக் கருத்திட்டங்கள்

- மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டம் (கண்டி மற்றும் காலி)
- கொழும்பு நகரினை அண்டிய நகர அபிவிருத்தி கருத்திட்டம்
- பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் நகர அபிவிருத்திக் கூறு (3K).
- கொழும்பு தலைநகரினை அண்டிய வெள்ளப்பெருக்குத் தாக்கங்களினைக் குறைக்கும் நகரச் சுற்றுச்சூழல் நம்பிக்கை நிதியம்

## 2. அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு

**நிறுவனக் கட்டமைப்ப - 2015**

**மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு**



# 3. துறைசார் செயற்திறன்

## 3.1. நிர்வாகப் பிரிவு

### பொறுப்பு

உரிய பணிகளை வினைத்திறனாகவும், விரைவிலும், தரமாகவும் மற்றும் தொடர்ந்தும் அரசின் சட்டதிட்டங்கள் மற்றும் சுற்றுநிரூபங்களுக்கமைய நிறைவேற்றுதல்.

### பிரிவின் மூலம் நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்

அமைச்சு உத்தியோகத்தர்களினதும், அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் உத்தியோகத்தர் குழாமினதும் சகல நிர்வாகச் செயற்பாடுகள், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் அமைச்சினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய சகல தாபனச் செயற்பாடுகள்.

### அமைச்சின் பதவியணியினர் தொடர்பிலான தகவல்கள்

| தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | 2015.12.31 ஆந் திகதியன்றைய ஆளணி | வெற்றிடங்கள்/மேலதிகம் (இருப்பின்) |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 31 | 16 | 15 (வெற்றிடங்கள்) |
| மூன்றாம் நிலை | 06 | 03 | 03 (வெற்றிடங்கள்) |
| இரண்டாம் நிலை | 95 | 27 | 68 (வெற்றிடங்கள்) |
| ஆரம்ப நிலை | 44 | 12 | 32 (வெற்றிடங்கள்) |
| **மொத்தம்** | **176** | **58** | **118** (வெற்றிடங்கள்) |

### அமைச்சின் பதவியணியினரின் மாற்றங்கள்

| தொகுதி | 2015.12.31 ஆந் திகதியன்று | | | |
|---|---|---|---|---|
| | இடமாற்றம் பெற்றுச் சென்ற | இடமாற்றம் பெற்று வருகை தந்த/புதிய ஆட்சேர்ப்பு/அமைச்சின் விடயப்பரப்பு மாறுவதற்கு முன்னர் அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்று வருகை தந்த | ஓய்வு பெற்ற | விலகிய |
| சிரேஸ்ட நிலை | - | 16 | - | - |
| மூன்றாம் நிலை | - | 03 | | - |
| இரண்டாம் நிலை | - | 27 | - | - |
| ஆரம்ப நிலை | - | 12 | - | - |
| **மொத்தம்** | **-** | **58** | **-** | **-** |

### பயிற்சியளித்தல்

- **வெளிநாட்டுப் பயிற்சி**

| நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | கலந்துகொண்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | அமைச்சு ஈடு செய்துள்ள மொத்தச் செலவு (ரூபா.) |
|---|---|---|
| 01 | 02 | 126,680 |

- **2015 – வெளிநாட்டுப் பயிற்சி வேலைத்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் தூதுவர் சேவை**

| # | பெயர் மற்றும் பதவி | பாடநெறி/நிகழ்ச்சித் திட்டம் | நாடு | காலவரையறை |
|---|---|---|---|---|
| 1 | எந்திரி. திரு. பி. சுரேஸ் மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி) | 2015 KRIHS – WBG நகர முகாமைத்துவம் தொடர்பில் அறிவினைப் பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம். | கொரியா | 2015.12.12 தொடக்கம் 2015.12.20 |
| 2 | திருமதி. கே.எஸ். முர முதலிகே, பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்பாடு) | | | |

## 3.2 கணக்குகள் பிரிவு

**பொறுப்பு**

அமைச்சு தொடர்பிலான பாதீட்டு மதிப்பீட்டினூடாக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு வரையறையினூடாக உரிய செலவுகளினை ஈடுசெய்தல், முன்னேற்ற மீளாய்வு, நிதி நிலவரம் தொடர்பிலான கணகுக்களினை தயாரித்தல் மற்றும் கணக்காய்வுக்கு முன்வைத்தல்.

**பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்.**

1. அமைச்சினதும் மற்றும் அமைச்சின கீழுள்ள நிறுவனங்களினதும் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பில் வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்து தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு முன்வைத்தல் மற்றும் வருடாந்த பாதீட்டினூடாக ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டு வரையறைகளினூடாக செலவுகளை முகாமை செய்து அமைச்சின் கடமைப் பொறுப்பினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவியினை வழங்குதல்.

2. பொதுத் திறைசேரிக்கு முன்வைக்கப்பட வேண்டிய பின்வரும் காலத்திற்குத் தேவையான அறிக்கைகளை உரிய காலவரையறையினுள் முன்வைத்தல்.

| அறிக்கை | கால வரையறை |
|---|---|
| வருடாந்த கொள்முதல் திட்டம் | உரிய வருடத்தின் ஆரம்பத்தில் |
| வருடாந்த கட்டுநிதிப் படிவம் | வருடத்தில் கடமையாற்றும் முதலாவது தினத்தில் |
| வருடாந்த கட்டுநிதியினைத் திட்டமிடுதல் | வருட ஆரம்பத்தில் |
| வருடாந்தப் பாதீடு | சுற்றுநிரூபங்களின் பிரகாரம் முன்வைத்தல் |
| வங்கிக் கணக்குகள் தொடர்பிலான உரிய மாதாந்த அறிக்கை | உரிய மாத அறிக்கையினை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் |
| வைப்புக் கணக்குகள் தொடர்பிலான காலாண்டு அறிக்கைகள் | காலாண்டு நிறைவு பெற்று அடுத்துவரும் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் |
| காலாண்டு கட்டுநிதி இணக்கக் கூற்றுக்கள் | காலாண்டு நிறைவு பெற்று அடுத்து வரும் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் |
| வருடாந்த கட்டுநிதியினைக் கோரும் படிவம் | ஒவ்வொரு மாதமும் கடமையாற்றும் முதலாவது தினம் |
| மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் | உரிய மாதத்தின் கணக்கு அறிக்கைகளை அடுத்துவரும் மாதம் ஐந்தாந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் |

3. கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட வேண்டிய அறிக்கைகள்

    i. வருடாந்த கணக்கு அறிக்கைகள் - உரிய வருடத்தின் கணக்கு அறிக்கைகளை அடுத்துவரும் வருடத்தின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர்.

    ii. அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் "பீ" கணக்கு - உரிய வருடத்தின் கணக்கு அறிக்கைகளை அடுத்துவரும் வருடத்தின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர்.

4. திறைசேரியுடன் ஒருங்கிணைப்பினை முன்னெடுத்து வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பிலும் மற்றும் ஏனைய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலும் கட்டுநிதியினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அந்நிதியினைக் கருத்திட்டங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல்.

5. வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் நிதிக்கொடுப்பனவுகளுக்கான உரிய படிவங்களினை, (withdrawal application) திறைசேரியினூடாக இலங்கை மத்திய வங்கிக்கு முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்

6. நிதி நடவடிக்கைகளை முறைசார் வகையில் முன்னெடுத்துச் செல்லுதல், நிதிப் பிரமாணங்கள், திறைசேரி சுற்றுநிரூபங்கள் மற்றும் கட்டளைகளுக்கமைய உரிய கொடுப்பனவுகள் மற்றும் கிடைப்பனவுகளினை கணக்கிடுதல் மற்றும் திறைசேரிக்கு அறிக்கையிடுதல்.

7. அமைச்சு, உரிய நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் பொருட் கணக்கெடுப்பு ஆய்வுச் செயற்பாடுகளினை ஒருங்கிணைத்தல் மற்றும் உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குதல்.

8. கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உரிய அறிக்கைகளை வழங்குதல், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் அனுப்ப வேண்டிய அறிக்கைகளின் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

9. அமைச்சின் கொள்முதல் செயற்பாடுகள்.

10. கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் உரிய பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு மறுமொழிகளினை அனுப்புதல்.

## 2015.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

2015.02.29 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டத்தின் (2014 ஆம் ஆண்டில் நிறைவேற்றபட்ட) பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைச்சின் (செலவுத் தலைப்பு இலக்கம் 166) கீழ் காணப்பட்ட நகர அபிவிருத்தி, தாழ் நில மீட்பு, அபிவிருத்தி மற்றும் மாநகரத் திட்டமிடல் போன்ற விடயங்கள் 2015.11.26 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம், புதிய செலவுத் தலைப்பு இலக்கம் 162 இன் கீழ் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

2015.12.09 ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றுநிரூப இலக்கம் 5/2015 இன் ஊடாக வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம், பழைய செலவுத் தலைப்பு இலக்கம் 166 இன் கீழ் அறிக்கையிடப்பட்ட செலவுகள், புதிய செலவுத் தலைப்பு இலக்கம் 162 இன் கீழ் மாற்றப்பட்டுள்ளதுடன், அன்றிலிருந்து 2015.12.31 ஆந் திகதி வரையான கிட்டத்தட்ட ஒரு மாத காலப்பகுதியினுள் செலவு செய்யப்பட்ட சகல செலவுகளும் புதிய விடயத் தலைப்பு இலக்கம் 162 இன் கீழ் பின்வருமாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சு - மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
தலைப்பு இல. - 162
தொகுதி - ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவு

(ரூ.மில்லியன்)

| விபரம் | ஒதுக்கீடுகள் | மொத்தச் செலவு | சதவீதம் % |
|---|---|---|---|
| **அமைச்சரின் அலுவலகம்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 7.00 | 5.85 | 84% |
| ஏனைய மீண்டுவரும் செலவு | 8.80 | 4.03 | 46% |
| முழு மொத்தம் | 15.80 | 9.88 | 63% |
| **தாபனம் மற்றும் நிர்வாகச் சேவைகள்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 28.04 | 20.04 | 72% |
| ஏனைய மீண்டுவரும் செலவு | 433.83 | 429.10 | 99% |
| **மொத்தம்** | **461.87** | **449.14** | **97%** |
| முழு மொத்தம் | **477.67** | **459.02** | **96%** |

**மூலதனச் செலவு (புனருத்தாபனம் மற்றும் கையகப்படுத்துதல்)**

(ரூ.மில்லியன்)

| விபரம் | ஒதுக்கீடுகள் | மொத்தச் செலவு | சதவீதம் % |
|---|---|---|---|
| **அமைச்சரின் அலுவலகம்** | | | |
| புனருத்தாபனம் | 8.30 | 6.36 | 76% |
| கையகப்படுத்துதல் | 3.80 | 1.90 | 50% |
| முழு மொத்தம் | **12.10** | **8.26** | **68%** |
| **தாபனம் மற்றும் நிர்வாகச் சேவைகள்** | | | |
| புனருத்தாபனம் | 10.00 | 9.13 | 91% |
| கையகப்படுத்துதல் | 11.20 | 9.24 | 82% |
| மொத்தம் | **21.20** | **18.37** | **87 %** |
| முழு மொத்தம் | **33.30** | **26.63** | **80%** |

**நகர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துல் தொடர்பிலான மூலதனச் செலவு**

(ரூ.மில்லியன்)

| விபரம் | | ஒதுக்கீடுகள் | மொத்தச் செலவு | சதவீதம் % |
|---|---|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபை | | 1,158.00 | 1,070.64 | 92 % |
| இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | | 1,300.00 | 1,278.99 | 98 % |
| கொழும்பு தலைநகரினை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | உலக வங்கி | 5,300.00 | 2,343.83 | 44 % |
| | இலங்கை அரசு | 1,800.00 | 465.91 | 26 % |
| கொழும்பு நகரக் குடியிருப்பு போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (3K) | ஜய்க்கா | 919.00 | 917.75 | 99.9% |
| | இலங்கை அரசு | 234.00 | 97.50 | 42 % |
| கத்தரலியத்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | | 55.00 | 3.79 | 7% |
| மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (காலி மற்றும் கண்டி) | உலக வங்கி | 3,450.00 | 442.37 | 13 % |
| | இலங்கை அரசு | 960.00 | 91.03 | 9 % |
| பாரிய கொழும்பு வெள்ளப்பெருக்குத் தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்திக் கருத்திட்டம் | | 100.00 | 27.12 | 27 % |
| கொழும்பு தலைநகரினை அண்டிய வெள்ளப்பெருக்கினை கட்டுப்படுத்துதல் தொடர்பிலான நகரச் சுற்றுச்சூழல் நம்பிக்கை நிதியம். | | 23.00 | 12.43 | 54 % |
| கொழும்பு தலைநகரினை அண்டிய திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் | | 2,000.00 | 0.19 | 0.01 % |
| மேற்குப் பிராந்திய மாநகர பிரதான திட்டம் | | 56.15 | 50.70 | 90 % |
| மட்டக்குளி நலன்புரி நிலையம் | | 150.00 | 150.00 | 100 % |
| **மொத்தம்** | | **17,505.15** | **6,952.24** | **40 %** |

# 4 அமைச்சின் கீழுள்ள நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள்

- **தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம்**

1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நாடு மற்றும் நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தினூடாக அமைக்கப்பட்ட நாடு மற்றும் நகரத் திட்டமிடல் திணைக்களம் அவ்வப்போது இடம்பெற்ற திருத்தங்கள் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினூடாக வழங்கப்பட்ட விசேட அதிகாரங்களின் பிரகாரம் மிகவும் விரிவான விடயப் பரப்புடன் தற்போது தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களமாக செயற்பட்டு வருகின்றது.

இலங்கையின் பொருளாதார, சமூக, பௌதிக மற்றும் சுற்றாடல் துறைகளில் கூட்டுத் திட்டத்தினை மேம்படுத்துதல், (ஒரு திட்டவட்டமான நோக்குடன் தேசிய பௌதிகத் திட்டமிடலொன்றினை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்) இயற்கை அழகு மற்றும் அதைச் சுற்றியுள்ள நகரங்களின் கட்டடக்கலை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களை பாதுகாப்பதும், அத்தகைய திட்டங்களுக்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

இதன் கீழ், சிறு நகரங்கள் தொடர்பில் 25 திட்டங்களைத் தயாரித்தல், அதுதொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல், கதிர்காமம் அபினவாராமயில் திட்டங்களினை வடிவமைத்தல், அனுராதபுரம் லோவாமகபாவில் கட்டிடத் திட்டங்களினை அமைத்தல் போன்றன நிறைவு பெற்றுள்ளதுடன், தேசிய பௌதிகத் திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டத்தினை நாளதுவரைப்படுத்தல், அடையாளம் காணப்பட்ட 87 பிரதேச செயலகங்களுக்கு மாற்று குடியேற்றங்களினைத் திட்டமிடுதல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட புனித பூமிகளின் வளர்ச்சி தொடர்பில் தேவையான திட்டங்களினைத் தயாரித்தல் போன்றன இடம்பெற்று வருகின்றன.

- **நகர அபிவிருத்தி அதிகார சபை**

ஒன்றிணைந்த திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் நகர அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பிரகடனஞ் செய்யப்பட்ட பிரதேசங்களின் பொருளாதார, சமூக மற்றும் பௌதிக வளர்ச்சியினை வலுவூட்டுவதற்கு 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நகர அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது.

நகரமயமாக்கலுக்கான தேசியக் கொள்கை கட்டமைப்புக்கு இணங்க "நகர அபிவிருத்தி பிரதேசங்களினை" பிரகடனஞ் செய்வதற்கு 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினூடாக நகர அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த 37 வருட காலப்பகுதியினுள் 253 பிரதேசங்களினை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான பிரதேசங்களாக இனங்கண்டு பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது.

**முன்னேற்றம் – 2015**

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 09 மாகாணங்களினுள் பின்வருமாறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

| # | மாகாணம் | திறைசேரி நிதியத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டங்கள் | நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியத்திலிருந்து | பிற நிதி ஆதாரங்களின் கீழ் | மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | மேல் | 04 | 10 | 06 | 20 |
| 2 | தென் | 04 | 09 | 05 | 18 |
| 3 | மத்திய | 09 | 07 | 04 | 20 |
| 4 | சப்பிரகமுவ | 03 | 06 | - | 09 |
| 5 | ஊவா | 02 | - | 02 | 04 |
| 6 | வட மத்திய | 01 | 06 | - | 07 |
| 7 | வடமேல் | 01 | 01 | 02 | 04 |
| 8 | கிழக்கு | 01 | 03 | 07 | 11 |
| 9 | வடக்கு | 04 | 07 | - | 11 |

- **இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்**

இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்பது, 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தஞ் செய்யப்பட்டு, 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொழும்பு மாவட்ட (தாழ்வான பகுதிகள்) மீட்பு மற்றும் அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டிணைப்பு நிறுவனமொன்றாகும்.

இதன் கீழ், கால்வாயினைப் பராமரித்தல், வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்துதல், ஈர நிலத்தினை முகாமை செய்தல், கட்டுமாணக் கருத்திட்டங்கள், கடற்பாசி விற்பனைக் கருத்திட்டம், நில மேம்பாடு மற்றும் ஒதுக்கப்பட்ட கால்வாய்களுக்கு அங்கீகாரத்தினை வழங்குதல், பொறியியல் பொருட்களின் ஆய்வு, உளவளத்துணை சேவைகளினை வழங்குதல் போன்றன இடம்பெறுகின்றன. அதேபோல, விசேட கருத்திட்டங்களினை முன்னெடுத்தல், வேரஸ் ஆற்று மழைநீர் வடிகால், சுற்றுச்சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம், களுஒயா மழைநீர் வடிகால், சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் மற்றும் கொலன்னாவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் வடிகால் ஆய்வு போன்றன முன்னெடுக்கப்படுகின்றன.

## 5. அமைச்சினால் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

### 5.1 வெளிநாட்டு நிதியின் கீழ் அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள்.

- **கொழும்பு தலைநகரனினை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (2012 - 2017)**

கொழும்பு தலைநகரினை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள நகரப் பிரதேசங்களினை மீளவும் கட்டியெழுப்புவதற்காக இலங்கை அரசு, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் அனுசரணையின் கீழ் நிதி வசதிகள் பெறப்பட்டுள்ளன. இக்கருத்திட்டம், பின்வரும் பிரிவுகளின் மீது விசேட கவனமொன்றினைச் செலுத்தி பாரிய கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களினை மேம்படுத்தும் அரசின் நீண்டகால நிகழ்ச்சித் திட்டத்திற்கு உடனடி மற்றும் காலத்திற்கு உகந்த உதவியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

- தலைநகர் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காரணத்தினால் ஏற்படும் பௌதிக மற்றும் சமூகத் தாக்கங்களினைக் குறைக்கும் நோக்கில் உயர் முன்னுரிமையினை வழங்கி நகர முதலீடுகளினை முன்னெடுத்தல்.
- பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளினை வழங்குதல் அதேபோல உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலுமைகளினை நீண்டகாலத்திற்கு மேம்படுத்துதல் மற்றும் கீழே காட்டப்பட்டுள்ள பிரிவுகள் தொடர்பில் அமுலாக்குவதில் உதவியினை வழங்குதல்.
  - வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகால் திட்டங்களினை முகாமை செய்தல்.
  - நகர அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளைப் புனருத்தானஞ் செய்தல் மற்றும் திறன் விருத்தி.

கருத்திட்டம் பின்வருமாறு 03 பிரிவுகளினைக் கொண்டு உள்ளடக்கப்படும்.

1. முதலாவது பிரிவு - வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவம்
2. இரண்டாவது பிரிவு - உட்கட்டமைப்பு வசதிகளைப் புனருத்தாபனஞ் செய்தல் மற்றும் கொழும்பு நகரினை அண்டிய உள்ளூராட்சி நிறுவனங்களில் திறன் விருத்தி.
3. மூன்றாவது பிரிவு - அமுலாக்கும் உதவி

- **மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (2014 - 2019)**

நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், 02 மூலோபாய நகரங்கள், அவை, கண்டி மற்றும் காலி போன்ற நகரங்களினை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கி நிதியுதவிகளினை வழங்குகிறது. நகரப் பிராந்தியங்களினுள் அந்த நகரச் சேவைகள் மற்றும் பொது நரகச் சேவைகளினை மேம்படுத்துதல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் கீழ், போக்குவரத்து மற்றும் நகர விவகாரங்கள் போன்ற பிரிவுகளினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ள நகரங்களாக யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் நகரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், யாழ் நகர் மேம்பாட்டின் கீழ் அந் நகரினை மேம்படுத்துதல், கலாசார மரபுகள், போக்குவரத்து, வடிகால் திட்டங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்கங்கள் போன்ற பிரிவுகளின் அபிவிருத்தியினை எதிர்பார்ப்பதுடன், இக்கருத்திட்ட முன்மொழிவினை மதிப்பிடும் செயற்பாடுகள் உலக வங்கியினால் இடம்பெற்று வருகின்றது. அனுராதபுர நகர அபிவிருத்தியின் கீழ் கலாசாரம், இயல்பான மரபுகள், வடிகால் முகாமைத்துவம், நகரப் போக்குவரத்து போன்ற பிரிவுகளினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன், இம் முன்மொழிவு தொடர்பில் பிரெஞ்சு அபிவிருத்தி பிரதிநிதித்துவ நிறுவனத்தின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- **பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் நகர அபிவிருத்திககூறு (2009 - 2015)**

பாரிய கொழும்பு நகர போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் நகர அபிவிருத்திக் கூறு அதாவது வெளிச்சுற்றுவட்ட அதிவேக வீதி கருத்திட்டம், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அமுலாக்கப்படுகின்றது. துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC) யிடையே 2007 ஆம் ஆண்டின் மார்ச் 28 ஆந் திகதி ஏற்படுத்திக் கொண்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இக்கருத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தினூடாக வெளிச்சுற்றுவட்ட அதிவேக வீதி திட்டத்திற்கு தளமொன்றாக கடுவலயில் இரண்டு வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், பன்னிப்பிட்டிய - கொட்டவா வீதியினை புனரமைத்தல் மற்றும் மாகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணித்தல் போன்ற கருத்திட்டங்களும் இடம்பெற்று வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் கொட்டாவ - மாலம்பே வீதியின் புனரமைப்புப் பணிகளினை ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.2 உள்நாட்டு நிதியின் கீழ் அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள்

- **மேற்குப் பிராந்திய மாநகர பிரதான திட்டக் கருத்திட்டம் (2015 - 2017)**

சமூக, கலாசார ஒருங்கிணைப்பினை உறுதி செய்து, சுற்றுச்சூழல் நிலைபேற்றுத் தன்மை மற்றும் வீட்டுப் பொருளாதார வளர்ச்சினையினை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட தகவல்கள் தொழில்நுட்பம், போக்குவரத்து, தொடர்பாடல் மற்றும் ஆற்றல் போன்ற பிரிவுகளில் மிகவும் செயலூக்கமாகவும், உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் வர்த்தக மேம்பாடு மற்றும் உயர் தொழில்நுட்ப வசதிகளுடன் வாழ்வதற்கான தகுந்த நகரமாக மேல் மாகாணத்தினை உருவாக்கும் தொலைநோக்குடன் 2015, மே 05 ஆந் திகதி இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் சிங்கப்பூரின் Surbana/CESM கம்பினியுடன் 2015 செப்ரெம்பர் 18 ஆந் திகதி இதன் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 66.5 மில்லியனாகும் என்பதுடன், கருத்திட்டக் காலப்பகுதி 2015.09.05 ஆந் திகதியிலிருந்து மேலும் 05 மாதங்களினால் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

- **கொழும்பு தலைநகரினை அண்டிய திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் (2015-2017)**

ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட 200 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட நிலம், எழுப்பப்பட்ட மக்கள் எதிர்ப்பின் காரணமாக (விசேடமாக மீன்பிடிச் சமுதாயம் மற்றும் வன விலங்கு திணைக்களத்திலிருந்து) கைவிடப்பட்டது. எவ்வாறாயினும், வனவிலங்கு பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே புதிய பிரதேசமொன்று இது தொடர்பில் இனங்காணப்பட்டுள்ளது. இந்நிலத்திற்குள் மீட்கப்பட்ட நிலத் துண்டு தொடர்பில் சற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளுமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினூடாக தயாரிக்கப்பட்ட செயற்திறன் குறியீட்டிற்கமைய, இந்தச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் கற்கை ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. இடவியல் ஆய்வுகள், புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் எண்ணக்கருசார் திட்டமிடல் தொடர்பில் உடன்படிக்கை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு கற்கை ஆய்வின் கீழ் சீரழிந்த பொருள் மண்ணின் மேற்பரப்புக் கட்டமைப்பில் ஒரு கரைப்பானாக கரைகிறது என சியாம் சீமெந்து பிரத்தியேகக் கம்பனியினால் விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. திறைசேரியினால் இது வரையில் இக்கருத்திட்டம் தொடர்பில் தேவையான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இக்கருத்திட்டத்திற்கு நிதியுதவியினை வழங்குவதற்கு உலகவங்கி விருப்பினை வெளியிட்டுள்ளது. இக்கருத்திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்பட்ட அன்றாட நகர திண்மக் கழிவினை பதனிடும் செயற்பாடுகளின் திறன் 1,200 மெட்றிக் தொன்னாகும்.

- **கொழும்பு தலைநகரினை அண்டிய வெள்ளப்பெருக்குத் தாக்கத்தினைத் தணிக்கும் நகரச் சுற்றாடல் நம்பிக்கை நிதியம் (2015-2017)**

அரசின் வேண்டுகோளுக்கு எதிரொலியாக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் கொழும்பு தலைநகரினை அண்டிய பிரதேசத்தின் வெள்ளப்பெருக்குத் தாக்கங்களின்றி சூழலொன்றினை உறுதிப்படுத்துவதற்கு இவ்வுதவி நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் காலப்பகுதியினை நீடிப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தினூடாக கொழும்பு தலைநகரினை அண்டிய பிராந்தியத்தின் முதலீடு தொடர்பில் உதவி வழங்கப்படும் என்பதுடன் அது பின்வரும் மூன்று கூறுகளினைக் கொண்டது.

**முதலாவது கூறு :** கொழும்பு தலைநகரின் கூட்டு வெள்ளப்பெருக்கு அபாய மதிப்பீடு

(அ) நகர வெள்ளப்பெருக்கு அபாயம் மீது செல்வாக்குச் செலுத்தும் தீங்குகள், வெளிப்பாடு மற்றும் அபாயத்திற்கு உட்படும் இயலுமை போன்ற துறைகள் மூன்றினை உள்ளடக்கி கொழும்பு தலைநகரினை அண்டிய பிராந்தியத்தில் கூட்டு மதிப்பீட்டினை முன்னெடுதல்.

(ஆ) கொழும்பு தலைநகர் வெள்ளப்பெருக்கு அபாயத்திற்கு உட்படுதல் தொடர்பில் செல்லவாக்குச் செலுத்தும் பௌதிக, சமூக, பொருளாதார மற்றும் நிறுவனம்சார் பரிமாணங்களினை ஒன்றிணைப்பதற்கு பல்துறை அணுகுமுறையொன்றினைத் தயாரித்தல்.

(இ) முக்கிய மைய நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பிரதான பங்குதார்களின் தொழில்நுட்ப இயலுமையினை மேம்படுத்துவதற்கு பயிற்சிகளின் தொகுதியொன்றினைத் தயாரித்தல்.

**இரண்டாவது கூறு :** கொழும்பு தலைநகரின் வெள்ளப்பெருக்கு அபாயத்தினைக் குறைக்கும் மூலோபாய மற்றும் செயற்பாட்டுத் திட்டம்.

(அ) கூட்டு அபாயங்களினை மதிப்பிடும் பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு வெள்ளப்பெருக்கு அபாயத்தினைக் குறைக்கும் மூலோபாயங்களினைத் தயாரித்தல்.

(ஆ) அபிவிருத்தித் திட்டங்களில் வெள்ளப்பெருக்கு அபாயத்தினைக் குறைப்பதன் முக்கியத்துவத்தினை உள்வாங்கி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினைத் தயாரித்தல்.

**பிற கூறு :** கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

இதன் கீழ் கருத்திட்டம் தொடர்பிலான ஒழுங்குமுறை, மதிப்பீட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்தல் மற்றும் இருபது ஆண்டு முன்னேற்ற அறிக்கைகளினைச் சமர்ப்பித்தல் இடம்பெறும்.